மாண்புமிகு திரு. கே. ஏ.மதியழகன் : தாக்கீது அரசுக்கு அப்படி வராது. அரசாங்கம்தான் அனுப்புமே தவிர, அப்படி அவர்களிடம் ஏதாவது தகவல்கள், புகார்கள் இருந்தால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கவனத்திற்கு கொண்டு வந்தால், அப்படி முறைகேடுகள் இருந்தால் அந்த முறைகேடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. எஸ். அக்னிராஜு : தலைவரவர்களே, இந்தப் பரிசுச் சீட்டு ஒவ்வொரு மாகாணத்திலும் நடத்தப்படுகிறது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் அதன் வருமானம், இந்தியாவிலுள்ள எல்லா மாகாணங்களிலும் உள்ள வருமானங்களில் நம்முடைய மாகாணத்தின் வருமானம் எந்த வரிசைக் கிரமத்தில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : இதிலே நாம் ஒன்றும் போட்டி போட முயற்சிக்கவில்லை. சில நல்ல காரியங்களுக்காக செய்ய நாம் முயற்சியெடுக்கிறோம்.

திரு. கரு. சீமைச்சாமி : சார், மாதா மாதம் இலட்சம் ரூபாய் பரிசளிக்கும் பரிசுத் திட்டத்தை நடத்தி வருகிறது. ஆனால் பொங்கல் பரிசு என்று 5 இலட்சம் ரூபாய் சிறப்புப் பரிசு என்று வழங்கியது. இப்பொழுது புத்தாண்டுப் பரிசு என்று 10 இலட்சம் என்றிருக்கிறது. இப்படி பரிசுத் தொகை ஏறிக்கொண்டே வருகிறதே, அது எந்த அளவில் போய் நிற்கும ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அவர்கள் அதிகமாக வேண்டுமென்று கருதுகிறார்களா அல்லது சமதர்மத்திலே திடீரென்று நம்முடைய சுதந்திரா கட்சி உறுப்பினரவர்களுக்கு ரொம்ப அக்கறை வந்துவிட்டதா என்பது எனக்குத் தெரியவில்லை. மக்கள் நலத்துறை நிறுவனமாக ஆக்கி சில காரியங்கள் செய்யப்படும் முயற்சியாக இருக்கிறது. அந்த முயற்சியில் யாரோ சில பேர்களைப் பணக்காரர்களாகச் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட முயற்சியல்ல. எல்லோரும் பங்கு கொள்கிறோம். நம்முடைய அபிவிருத்தி வேலைகளிலே. குடிநீர் வசதி, பள்ளிக்கூடங்கள் அமைக்க இப்படிப்பட்ட சமூக நலப் பணிகளுக்காக சகல மக்களின் பங்கும், பணியும் அதிலேயிருக்கிறது.

திரு. எம். அப்துல் கபூர் சாகிப் : தலைவரவர்களே, விற்பனையாகாத பரிசுச் சீட்டிற்குப் பரிசு விழுந்தால் அது யாருக்குச் சேரும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : விற்பனையாகாத டிக்கெட்டுகளைப் பொறுத்தவரையிலே, முதல் பரிசிலே விற்பனையாகாத டிக்கெட்டுகளுக்கு வந்தால், அது விற்பனையான டிக்கெட்டிற்கு வரும் வரையில் குலுக்கப்படும், இரண்டாவது பரிசுக்கும் அப்படித்தான். மூன்றாவது பரிசுக்கும் விற்பனையாகிற டிக்கெட்டிற்குக் கொடுக்கப்படும். 4-வது பரிசுச் சீட்டைப் பொறுத்த வரையிலே (combination) ஆக 4 டிஜிட்கள்தான் ஒதுக்கப்படுகிறது. 100 ரூபாய் பரிசு விற்பனையான பரிசுச் சீட்டிற்கும் விற்பனையாகாத பரிசுச் சீட்டிற்கும் கொடுக்கப்படுகிறது. விற்பனையாகாத டிக்கெட்டிற்குப் பரிசுக் கிடைத்தாலும் அது அரசாங்கத்தினுடைய கஜானாவிலே, அரசாங்கம் வெற்றி பெற்றதாகச் சேர்க்கப்படுகிறது. அது ரொம்ப சொற்பத் தொகைதான்.

Fire accident in Royapettah

* 608 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether five children between four and eight years of age, died in a fire which broke out in a shed on the terrace of a home in Royapettah, Madras on 17th January 1970; and

(*b*) the causes for the fire?

1970 எப்ரல் 1]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) திறந்த வெளி மேல் தளத்தில் வைக்கோல் குவிக்கப்பட்டிருந்த இடத்துக்கு அருகில் அமைந்த புகைபோக்கியிலிருந்து வந்த தீப்பொறியால் இத் தீவிபத்து ஏற்பட்டதாகச் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரும் சென்னை, காவலதுறை ஆணையாளரும் தெரிவித்துள்ளனர்.

திரு. கே. விநாயகம்: மாடிகள் வைத்த அந்தப் பகுதியிலே வாழும் அந்த மக்கள் அங்கெல்லாம் குறிப்பிட்ட இடத்திலேதான் வைக்கோல் போர் போட்டு வைக்க வேண்டுமென்று கார்ப்பொரேஷன் விதிகள் இருந்தும் மாடி மீது வைத்திருந்ததற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது? கார்ப்பொரேஷன் அதிகாரிகள் அப்போதைக்கப்பொழுது கண் காணித்து வருகிறார்களா, இல்லையா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்போதைக்கப்போது சம்பந்தப் பட்ட அதிகாரிகள் இவைகளைத் தடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனாலும் சிலயிடங்களில் அவைகளையும் மீறி இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறுகின்றன. மேல்மாடியிலே வைக்கோல் வைக்கப் பட்டிருந்தது மட்டுமல்ல, பக்கத்திலே வீட்டினுடைய புகைபோக்கிக் குழாயும் இருந்திருக்கிறது. அதன் வழியாகத் தீப்பொறி வைக்கோல் போரிலே பட்டுத்தான் இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது.

திரு. கே. விநாயகம்: இறந்துபோன இந்த ஐந்து குழந்தைகளின் பெற்றோர்களுக்கு ஏதாவது நஷ்டஈடு அரசாங்கம் தந்ததா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் கவனிப்ப தாகத் தெரிகிறது.

Representations received by Vigilance Commission

* 609 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether complaints and letters sent to the Vigilance Commission are being transferred by the Commission to the Departments concerned for disposal; and

(b) the details of the "follow up" work done by the Commission in such cases?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) எப்போதுமே அல்ல, ஆனால் 'பிடியாணை' யின்றி பிடிக்கத் தகா வழக்குகள் சம்பந்தப்பட்ட குற்றச் சாட்டுகள் மட்டும் அனுப்பப்படுகின்றன.

(இ) கடிதங்கள் 'முடிவு செய்யப்படுவதற்காக' சம்பந்தப்பட்ட துறை களுக்கு அனுப்பப்பட்டால், முறையீடுகளிலுள்ள குற்றச்சாட்டுகள் குறித்துத் தேவையான நடவடிக்கைகளை அந்தத் துறைகள் மேற்கொள்ளும். எனவே, இது குறித்து "தொடர் நடவடிக்கை"க்குத் தேவை எதுவுமில்லை.

THIRU T. MARTIN: Mr. Speaker, Sir, for streamlining the administration of the Vigilance organisation, the Vigilance Commission has sent some proposals to this Government and they are pending before this Government. In view of the prevalence of a large amount of mamuls and corruption in the various departments, may I request the Hon. Chief Minister to state whether the Govern-